மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

E. RAJ.

மணி 1 ★ 8 பக்கங்கள் 2-8-59 விலை 13 காசுகள் ★ ஒலி 42

ஒரே மேடையில் அண்ணா-நிதி மந்திரி!

ஓவியக் கலைக்கு அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டும்!

ஆபாசம் என்பது அவரவர் மனப்பக்குவத்தைப் பொருத்தது!

ஓவியர் சங்க ஆண்டு விழாவில் அறிஞர் அண்ணா அளித்த கருத்துரை!

[சென்ற 26-7-59ம் தேதி மாலை 5 மணிக்கு சென்னை கோடம்பாக்கம் விஜயா கார்டனில் சென்னை ஓவியர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழாவும்—தமிழகத்தின் ஓவிய மன்னன் மாதவனின் பட்ட மாரிப்பு பாராட்டு விழாவும்—நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது! ஓவியர் சங்கத்தின் செயலாளர் திரு. ஆர். டி. அரசு எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்! அதன் பின்னர் நிதி அமைச்சர் தலைமையுரை நிகழ்த்தினார்! (நிதி அமைச்சரின் தலைமையுரையின் விளக்கம் அமிர்தம் இதழில் இடம் பெறும்) அறிஞர் அண்ணா அவர்கள் மாதவனுக்கு ஓவியர் மன்னன் என்ற பட்டத்தை வழங்கி நீண்டதொரு சொற் பொழிவாற்றினார்! அண்ணா பட்டம் வழங்குவதற்குமுன்பு ஓவிய மன்னரைப் பாராட்டி [மலர் மாலைகளை பல பிரமுகர்கள் அணிவித்தனர்.]

அன்புள்ள தலைவரவர்களே! நண்பர்களே! ஓவியர் சங்கத் தலைவர் நண்பர் மாதவன் அவர்களுக்கு ஓவிய மன்னர் என்ற பட்டத்தை அளிக்கும் விழாவில் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பினை ஏற்படுத்தி தந்ததற்கு எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதவன் அவர்களுக்கு ஓவிய மன்னர் என்ற பட்டம் வழங்கப் பட்டது! மன்னர்களிடத்திலே இருந்து ராஜ்யங்களை பறித்துக் கொண்டோம். அந்த ராஜ்யங்களை வகிக்க திறம் படைத்தோரிடம் அவைகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. மன்னர்களிடமிருந்து ராஜ்யங்கள் பறிக்கப் பட்டதற்கு காரணம் மன்னர்களெனப் பட்டம் வகிக்க திறமையற்றவர்கள் மன்னர்களாக இருந்ததேயாகும்! இதன் காரணமாக அந்த மன்னர்களின் ராஜ்யமெல்லாம் பறிக்கப்பட்டு தற்போது மக்களாட்சி ஏற்பட்டுள்ளது!



மக்களாட்சி காலத்தில் இப்படிப்பட்ட விழாக்களை நடத்துவதன் மூலமும், அந்த கலைத் துறையில் திறமை வாய்ந்தவர்களை பாராட்டுவதன் மூலமும் பட்டம் வழங்குவதாலும், பொன்னாடை போர்த்துவதன் மூலமும் மாதவன் போன்ற பலரைப் பெற வழிவகைகள் செய்வதாகும்.

பாராட்டுவது என்பது கீழான எண்ணம் என்று சிலர் கருதுகின்றனர். அது தவறாகும். திருக்குறளில் ஈதல் இசைபட வாழ்தல என்று கூறப்பட்டுள்ளது போல்பிறருக்குப் பொருளை மட்டுமல்லாமல் தன்னுடைய திறமையையும் உழைப்பையும் ஈந்து அதன் காரணமாக புகழை ஈட்டுவது தமிழரது பண்பு! ஓவியர்கள் என்ன கொடுக்க முடியும். தங்களது கைத்திறனையும் அதன் காரணமாக உண்டாகும் ஓவியக் கலையையும் தான் கொடுக்க முடியும்! இசைபட வாழ்தல் என்று கூறும் போது இப்படிப்பட்ட உயர்ந்த கலையை நாட்டு மக்களுக்கு அளிக்கும் கலைஞர்கள் இசைபட வாழ்தல் அதாவது அவர்கள் தங்கள் கலையை மேலும் மேலும் வளர்க்க யாதொரு தட்டுப் பாடுமின்றி வாழ மக்கள் வழி வகைகள் செய்ய வேண்டுமென்பதுமாகும்.

இதற்குத்தான் இம்மாதிரி பாராட்டு விழாவும், பொன்னாடை போர்த்தலும் மலை போல மாலைகளணிவித்து மகிழ்தலும், பட்டம் வழங்குதலையும் விழாவாக கொண்டாடுகிறோம். இப்படிப்பட்ட விழாக்கள் நடத்தப்படுவதன் காரணமாக இப்படிப் பட்ட கலைஞர்களுக்கு ஒரு ஆர்வமும், நமக்கும், நாட்டிலே நல்லதொரு எதிர்

6-ம் பக்கம் பார்க்க

மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 1 | 2—8—59 | ஒலி 42

புதுவை மாநிலமே! புகழ்க் கொடி நாட்டு!

பிரான்ஸ் நாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடிய கோரப்பிடியில் நேரடியாகச் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் புதுவை மாநிலத்தில் முதன் முதலாக பொதுத் தேர்தல் நடைபெற இருக்கிறது.

இந்தப் பொதுத் தேர்தலில் எல்லா கட்சிகளும் போட்டியிடுகின்றன! காங்கிரஸ்கட்சி போட்டியிடுகிறது திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிடுகிறது, சுதந்திரக் கட்சி போட்டியிடுகிறது, மக்கள் முன்னணி போட்டியிடுகிறது—மற்றுமுள்ள சுயேச்சைகளும் போட்டியிடுகிறார்கள்!

எல்லா கட்சிகளும் புதுவை மாநிலத்தின் மீது புது அக்கறை காட்டி தேர்தல் பிரச்சாரங்களை செய்து வருகின்றன! ஆனால் ஒரு கட்சி கூட "புதுவையின் புது அடிமையை உடைத்தெறிவோம்" என்று கூறவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தினரைத் தவிர அனைவரும் ஏக இந்தியாகாரர்கள்! புதுவையின் விடுதலையைப் பற்றி கொஞ்சமும் அக்கறை காட்டாதவர்கள்! தேர்தலிலே நின்று வெற்றி பெற்று பதவி பீடத்தில் அமர்ந்து—மக்களிடத்தில் அதிகாரத்தை செலுத்தி தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தை ஆசையாகக் கொண்டவர்கள்! எனவே மக்களுடைய நலம், மக்களுடைய வாழ்வு, மக்களுடைய உரிமை, மக்களுடைய தன்மானம் போன்றவைகளில் சிறிதும் அக்கறைகாட்டி அதற்காக கொஞ்சமும் பாடுபட நினைக்க மாட்டார்கள் என்பது உறுதி! உறுதியிலும் உறுதி!

பிரான்ஸ் நாட்டு அடிமையாக இருந்த மக்கள் அந்த அடிமைத் தளையிலிருந்து நீங்கியவுடன் தமிழ் மாநில ஆட்சியோடு, தமிழ் மக்களோடு ஒன்று சேர்ந்து வாழ வழியில்லாமல் தவிக்கும் நிலையை ஏற்படுத்தினார்கள் காங்கிரஸ் கண்ணியவான்கள்! டில்லியின் நேரடி ஆட்சியில் சிக்க வைத்தார்கள் காந்தி சீடர்கள்!

காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத்தைப் பற்றியும், காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் நடைபெற்று வருகிற கொடுமைகளைப் பற்றியும், அநீதிகளைப் பற்றியும், அக்கிரமங்களைப் பற்றியும் புதுவை மாநில மக்கள் நன்கு தெரிந்தவர்கள் தான்! எனவே காங்கிரஸ் கட்சிக்கு புதுவை மாநில மக்கள் நிச்சயமாக தங்கள் ஆதரவை அளிக்க மாட்டார்கள் என்றே நம்புகிறோம்!

அடுத்தபடியாக நகர முன்னணி தேர்தலுக்காக ஏற்படுத்தப்பட்ட கட்சியாகும்! தேர்தல் முடிந்த பிறகு—வலிவு பெற்ற கட்சியோடு சேரக்கூடும்!

சுதந்திரக்கட்சி கொள்கையற்ற கட்சி! அதாவது உயிரில்லாத--வெறும் உடலோடு மட்டும் இயங்கி வரும கட்சி!

சுயேச்சைகள்! ஜோக்கர் சீட்டுகளைப் போல் சூழ்நிலைக்கேற்றவாறு பயன்படக் கூடியவர்கள்!

இந்த நிலையில் புதுவை மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும்! தங்களுடைய எதிர்கால வாழ்வை நிர்ணயித்துக் கொள்வதில் சர்வ ஜாக்ரதையாக இருக்க வேண்டும்!

ஆட்சிகளுக்காகவோ, அல்லது ஆட்களின் தயவுக்காகவோ, அல்லது அவர்கள் தரும் சில்லறை காசுகளுக்காகவோ ஓட்டளிப்பது—கண்ணை விற்று சித்திரம் வாங்குவதற்கு ஒப்பாகும் என்பதை புதுவையிலுள்ள மக்கள் அனைவரும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்!

புதுவையின் நல்வாழ்வுக்காக, புதுவை மக்களின் உரிமைக்காக எந்த கட்சி பாடுபடுகிறதோ அந்தக் கட்சியை ஆதரிக்க வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகம் புதுவை மக்களுக்கு நிச்சயமாக புதுவாழ்வளிக்கும் என்பதை உறுதியோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ருல் ஏழைகளுக்காகவே பாடுபடும்! இதற்கு சான்று சென்னை நகர் சபை ஒன்றே போதும் என்று எண்ணுகிறோம்!

சென்னை நகர சபையின் ஆட்சி எந்த முறையில், யாருக்காக, யாருடைய நல்வாழ்வுக்காக பாடுபடுகிறது என்பதை புதுவை மக்கள் அறிந்ததே!

எனவே கழகத் தோழர்களை வெற்றி பெற வைப்பது புதுவை மக்களின் கடமை யாகும்!

மொத்த முள்ள 39 இடங்களில் நமது கழகம் 28 இடத்தில் போட்டி இருக்கிறது!

இந்த இருபத்தி எட்டு பேர்களும் புதுவையின் இதயத்திலே இடம் பெற வேண்டும்! மக்கள் இதயத்தில் இடம் பெற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழக வீரர்கள் தான் என்பதை எடுத்துக் காட்டி சர்வாதிகார காங்கிரஸ் கட்சிக்கும். மற்றுமுள்ள கட்சிகளுக்கும் நல்ல பாடத்தை போதிக்க வேண்டும்!

"புதுவை பொலிவோடும், வலிவோடும், நல்ல எழிலோடும், நல்ல வளமோடு வாழ வேண்டும், வளம் பெற வேண்டும்" என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அழியாத ஆசையாகும்!

புதுவை மக்கள் தங்களது ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் ஒப்புவித்து தமிழகத்திற்கு வழியும் காட்டி திராவிடத்தின் பெருமையையும் உலகுக்கு எடுத்துச் சொல்லி—புதுவை நிலத்திற்கும் பெருமையைத் தேடித் தந்து புகழ்க் கொடியை நாட்ட வேண்டும்!

புதுவை மாநிலத்தில் திராவிடத்தின் விடுதலைக் கொடியும் பறக்க வேண்டும்!

புதுவைத் தோழர்களுக்கு வெற்றி மாலையை சூட்டி மக்கள் களித்து மகிழும் காலம் தொலைவில் இல்லை என்ற பெருமிதத்தோடு இருக்கிறோம்! கழகத் தோழர்களுக்கு வெற்றி மாலை சூட்டுங்கள்!

7-ம் பக்கத்தின் தொடர்ச்சி

சைக் குலையை கொத்தி விட்டு திரும்பினவாம்! இதைக் கண்ட ஓவியன் சுக்கீஸ், தாராசிசைப் பார்த்து "எங்கே உன் ஓவியம்?" என்று கேட்டானும்! தாராசீஸ் "அதோ" என்று ஒரு திரையை நோக்கிக் காட்டினும்! ஓவியத்தைக் காண திரையை விலக்கச் சென்றுன்—திரை விலகவில்லை — அதே ஓவியமாக இருந்ததாம்! அந்த அளவு ஓவியம் உயிர் பெற்றிருந்தன அங்கு!

நிதி அமைச்சர் அவர்கள் குறிபிட்டார்கள் "சினிமா சுவரொட்டி விளம்பரங்களில் ஆபாசங்கள் இருக்கின்றன, அதைத் தவிர் க வேண்டும்" என்று!

ஆபாசம் கூடாது தான்! நானும் சொல்லுகிறேன் ஆபாசம் கூடாது என்று தான்! ஆபாசம் எல்லா இடங்களிலும் ஒழிக்கப்பட வேண்டும்! கடவுள் கதைகள் தீடடப்படுகின்ற நேரத்தில்—கடவுள் படங்கள் வரைகின்ற போதும் இந்த ஆபாசம் இருக்கக் கூடாது! குளத்தில் குளிக்கின்ற பெண்களின் சேலையை திருடிடும் ஆபாசம் நிறைந்த படங்களும் இருக்கக் கூடாது! சுவரொட்டிகளுக்கு மட்டும் ஆபாசம் கூடாது என்று சொல்லுவதால் ஆபாசமும் ஒழிந்துவிடாது!

ஆலக்ஸாண்டர் காலத்தில் ஓவியம் தீட்டப்பட்டு-அந்த ஒவியகதை ஒருபலகணியோரத்தில் வைப்பானும்! தெருவில் செல்லுகிறவர்கள் அந்த பலகணிவாயிலாக அந்த ஓவியத்தைப் பார்த்து என்ன குற்றமிருக்கிறது என்று கண்டுபிடித்து சொன்னல் அந்த குற்றத்தை உடனே சரி செய்வானும்! ஒரு நாள் ஒரு செருப்பு தைப்பவன் அந்த ஓவியத்தைப் பார்த்து "இது சரியில்லை—செருப்பு இப்படித் தான இருக்கும், பின்னல் நீண்டிருக்கிறது" என்று கூறினனும்! "நீ சொல்லுவது சரிதான், செருப்பு இப்படித் தான் இருக்காது" என்று கூறி அதை திருத்தி சரி செய்தானும்! அதே செருப்பு தைப்பவன் மறுநாள் ஒரு ஓவியத்தைப் பார்த்து விட்டு—'இதென்ன ஓவியமா? அந்த அம்மாவின் கூந்தல் அப்படியா இருக்கும்" என்று கூறினனும்! அந்த ஓவியன் அவனைப் பார்த்து "நீ செருப்போடு இரு மேலே போகாதே" என்று கூறினனும்! (இந்த இடத்தில் கருணாநிதியின் பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் விழுந்து விழுந்து சிரித்து ரசித்தார்)

ஓவியக் கலை மிக உயர்ந்த கலை! ஓவியக் கலையின் உயர்வை அறிந்து மக்கள் பாராட்ட வேண்டும்! "வாழ்க ஓவியக் கலை, வாழ்க ஓவியக் கலையின் சிறப்பு-வாழ்க பட்டம் பெறும் மாதவன்" என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்,

புதுச்சேரி மக்களே! உங்களுடைய ஓட்டு யாருக்கு?

திராவிடம் வேண்டுமா? வேண்டாமா?

வேண்டுமென்றால் தி. மு. க. வை ஆதரியுங்கள்!

வேண்டாமென்றால் காளை மாட்டுக்கே போடுங்கள்!

"அண்ணாதுரையும், அவரைச் சார்ந்த ஒரு சில தலைவர்களும் தான் 'திராவிட நாடு, திராவிட நாடு' என்று கத்துகிறார்களே தவிர பொது மக்கள் எவரும் திராவிடநாட்டை விரும்பவில்லை, அவர்களுடைய பேச்சுக்கும் செவி சாய்க்கவில்லை" என்று அமைச்சர் பதவியில் இருக்கின்ற காந்தி சீடர்கள் முதல் கொடி தூக்கி அலைகின்ற தொண்டர்கள் வரை பேசி வருகின்றார்கள்!

"அண்ணாதுரை மணிக்கணக்கில் பேசுகிறார்—அழகாகத்தான் பேசுகிறார்! அவருடைய பேச்சுக்குக் கூட்டமும் வரத்தான் செய்கின்றன! ஆனால் அவர்கள் அத்தனை பேரும் திராவிட நாட்டை விரும்புகின்றார்களா என்றால் இல்லை!"

"நெடுஞ்செழியன் மூச்சு விடாமல் தான் பேசுகிறார்! அவருடைய பேச்சில் வீரமும், உணர்ச்சியும் இருக்கத்தான் செய்கின்றன! பயன்...?"

"கருணாநிதி கனல் கக்கும் வார்த்தைகளைத்தான் கொட்டுகிறார்! என்றாலும்...?"

"மதியழகன்" நாம் மன்னர்களின் பரம்பரை — நாடாண்ட இனம்" என்று சொல்லித்தான் பார்க்கிறார்! ஆனாலும்...?"

காந்தியின் தத்துப்பிள்ளைகள் இப்படியெல்லாம் பேசி வருகிறார்கள்!

"கூட்டம் கூடினால் ஓட்டுகள் கிடைத்து விடும் என்று பொருளல்ல" என்று காமராஜரும் கூறுகிறார், கக்கனும் கூறுகிறார்!

அவர்கள் செய்வது விஷமப் பிரச்சாரம் தான் என்றாலும் அவர்களுக்கு நாம் நல்ல பாடம் கற்பித்துக் காட்டவேண்டாமா?

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாடு பெற வேண்டும் என்ற இலட்சியத்திற்காக அல்லும் பகலும்அரும்பாடுபட்டு வருகிறது! இளைஞர்கள், வாலிபர்கள், ஒரு சில பெரியவர்கள், மாதர்கள் அனைவரும் இந்த விடுதலை இயக்கத்தின்மீது அழியாத பாசமும், பற்றும் வைத்து விடுதலைப் போராட்டத்திலும் பங்கு பெற காத்திருக்கிறார்கள்! ஆனால் ஆளும் அமைச்சர்கள் சொல்லுகிறார்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை மக்கள் ஆதரிக்கவில்லை என்று!

அப்படிப்பட்ட அறியாத்தனம் படைத்த அமைச்சர்களுக்கு நாம் பாடம் சொல்லித் தருவது எப்போது? எந்த முறையில், எந்த வகையில் பாடம் சொல்லித் தருவது?

கூட்டம் கூடினால் அது அவர்களுக்குப்பாடமாக அமையாது! கருப்புக் கொடி காட்டினால் மட்டும் அது அவர்களுக்கு படிப்பினையாக இருக்காது!

போராட்டம் நடத்தினால்கூட—அதிகாரம் இருக்கிறது, ஆள் இருக்கிறது, படை இருக்கிறது அது விண்ணிலும், மண்ணிலும் நீரிலும், நிலத்திலும் செல்லும் திறன் இருக்கிறது — நம்மை பொடிப் பொடியாக்கிக் காட்ட உறுதி படைத்த—உருக்கினாலும் உருகாத இரும்பு உள்ளம் இருக்கிறது! எனவே நம்மைப்பற்றி ஒரு சிறிதும் கவலை கொள்ள மாட்டார்கள்!

ஆனால் அவர்களை அஞ்ச வைக்கும் ஆயுதம், அவர்களுடைய உள்ளத்தை உலுக்க வைக்கும் ஆயுதம், அவர்களுடைய அதிகார மமதையை அழிக்கும் வல்லமை படைத்த ஆயுதம் ஒன்றே ஒன்றுதான்! அந்த ஒன்றுக்குதான் அவர்கள் அஞ்சுவார்கள்!

அதுதான் தேர்தல்! தேர்தல் ஒன்றின் மூலம் தான் அவர்களுடைய திமிரை அடக்க முடியும்!

அண்ணா புதுச்சேரியில் பேசுகிறார் என்றால், காரைக்காலில் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள் என்றால்—எட்டணா கட்டணம் செலுத்தி வண்டி ஏறி கூட்டத்திற்குச் சென்று திரும்புவதால் மட்டும் காந்தியவாதிகளின் கொட்டத்தை ஒருநாளும் அடக்க முடியாது! அண்ணாவின் பேச்சைக் கேட்டு அதை செயல் உருவாக்கி காட்டுவதொன்றே அவர்களுக்குச் சொல்லித்தரும் நல்லதொரு பாடமாகும்!

இதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் புதுவை மாநில மக்களுக்கு கிட்டி இருக்கிறது!

அறிஞர் அண்ணா அவர்கள் புதுச்சேரி மாநாட்டில் பேசும்போது 'திராவிட நாடு பி[illegible]னையை அடிப்படையாக வைத்தே நாம் தேர்தலில் நிற்போம்" என்று கூறி இருக்கிறார்! இதைப் புதுச்சேரி மக்களும் காரைக்கால் மக்களும் மறந்து விடக் கூடாது!

இத் திங்கள் 11-ம் நாள் காரைக்காலிலும், 14-ம் நாள் புதுச்சேரியிலும் நடை பெற இருக்கிற தேர்தல் மூலம் திராவிடத்தின் விடுதலை இலட்சியத்தை உலகுக்கு அறிவிக்க வேண்டும்!

"பொது மக்கள் திராவிட நாட்டை விரும்பவில்லை" என்கிறார்கள் அமைச்சர்கள்!

புதுவை மக்களே! அமைச்சர்கள் கூறுவது உண்மை இல்லை என்றால் 'எங்களுக்கு திராவிடம் வேண்டும்' என்று கூறினால் அந்த இலட்சிய வீரர்களுக்கு ஓட்டளியுங்கள்!

'திராவிட நாடு வேண்டாம்—திராவிடம் என்றென்றும்வடவர்களுக்கு அடிமையாகத்தான் இருக்க வேண்டும்' என்று நீங்கள் எண்ணினால் காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டளியுங்கள்!

'வட நாடு வஞ்சகம் செய்கிறது! வடநாடு வளம் பெறுகிறது! வடநாடு வாழ்ந்து கொண்டே போகிறது — தென்னாடு தேய்ந்து, அதனால் தென்னாட்டு மக்களின்வாழ்வு தேய்ந்து வருகிறது' என்று எண்ணினால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டளியுங்கள்!

8-ம் பக்கம் பார்க்க

இது சேலத்து நாகரீகமோ?

சென்னை நகர சபையில் காங்கிரஸ்காரர்களும் மற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு, செய்தது முறையா? நேர்மையா? என்று நாம் சென்ற "மாலைமணி"யில் கேட்டிருந்தோம்!

இதற்குப் பல காங்கிரஸ் நண்பர்கள்='மேயர், தீர்மானத்தை குரல் ஓட்டுக்கு விட்டார்—எண்ணிக்கை ஓட்டில் விடவில்லை! எனவேதான் வெளியேறினார்கள் என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள்!

மைனாரிடியாக இருந்தும் எண்ணிக்கை ஓட்டு விடாத காரணத்தால்தான் வெளியேறியதாகச் சொல்லுகிறார்கள்! இது சரியா? இது நாகரீகமா? என்று கடிதம் வரைந்திருக்கிறார்கள்! சரி! வாதத்திற்காகவே சொந்தப் பொறுப்பில் தவறென்றே ஒப்புக்கொள்ளுகிறோம்!

சேலம் நகர சபையில் அறிஞர் அண்ணாவுக்கும், சென்னை மேயர் அரசுவுக்கும் வரவேற்பளிக்கும் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்பு—காங்கிரஸ்காரர்கள் வெளி நடப்பு செய்வானேன்?

அண்ணாதுரையும், அரசுவும் உனக்குப் பிடிக்கவில்லை, வரவேற்பளிப்பது உனக்குப் பொறுக்கவில்லை என்றால் தீர்மானத்தை எதிர்தது ஓட்டுப் போடுவது தானே நியாயம்! அப்படி நீ எதிர்த்த பின்பும் தீர்மானம் நிறைவேறிவிட்டதென்றால் அதை ஒப்புக்கொள்வதுதானே முறை!

இதை விட்டுவிட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பு, அண்ணாதுரைக்கு நகர சபை வரவேற்பளிக்க முடிவு செய்துவிட்ட பின்பு வெளி நடப்பு செய்வதென்றால் என்ன பொருள்? பொறுக்கவில்லை! சகிக்கவில்லை! என்றுதானே அர்த்தம்!

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பும் நீங்கள் வெளி நடப்பு செய்கிறீர்கள் என்றால், நீங்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும், நீங்கள் ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும் அண்ணாதுரையை வரவேற்க முடிவு செய்துவிட்ட பின்பு வெளி நடப்பு செய்வது எந்த நாகரீகத்தைச் சேர்ந்தது? ஒரு வேளை ஊருக்கொரு நாகரீகமோ—அதில் இது சேலத்து நாகரீகமோ?

அறிஞர் அண்ணா – நிதி அமைச்சர் ரகசிய உரையாடல்!

நிதி அமைச்சரின் உண்மையான எண்ணம் வெளிப்பட்டது!

நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் தஞ்சையில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு சவால் விட்டு "என்னோடு ஒரே மேடையில் வந்து பேசுங்கள்—அதை மக்கள் தீர்ப்புக்கு விடுங்கள்" என்று பேசினதும்—இதே போல் கூட்டம் தவறாது, மாநாடு தவறாது ஒவ்வொரு இடத்திலும் "வடக்கு வாழவில்லை, தெற்கு தான் வாழ்கிறது" என்று கூறி வந்திருக்கிறார். இதே நிதி அமைச்சர் சென்ற 24-7-59ம் தேதியன்று சென்னையில் நடைபெற்ற தென் இந்திய வியாபார சபை வட்டார மாநாட்டைத் துவக்கி வைத்து "தென் இந்தியாவுக்கு உருக்குத் தொழிற்சாலை வேண்டும்" என்று வற்புறுத்திப் பேசி இருக்கிறார். நிதி அமைச்சரின் இந்த பல்டியை கவனிக்கும் போது அறிஞர் அண்ணாஅவர்களோடு ஒரே மேடையில் நின்று வாதாடித் தோற்றுப் போகாமலேயே சரணாகதி அடைந்திருக்கிறார்—அதாவது மறைமுகமாக சவாலை வாபஸ் வாங்கி இருக்கிறார் என்று தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த நிகழ்ச்சியை கற்பனைக் கண் கொண்டு பார்த்தால் எப்படி இருக்கும் என்பதை எடுத்துக் காட்டவே இந்த உரையாடலை கீழே தருகிறோம்!

[நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் தன்னந்தனியாக அண்ணா அவர்களை சந்திக்க அண்ணாவின் இல்லத்திற்கு வருகிறார்: அறிஞர் அண்ணா அவர்கள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தபடி உட்கார்ந்திருக்கிறார்.]

நிதி அமைச்சர்: "வணக்கம் அண்ணா!"

அண்ணா: "வணக்கம்! வாங்க! இப்படி உட்காருங்கள்!"

நிதி; "உங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன்! ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்! மன்னிக்கவும்"

அ: "அப்படி ஒன்றுமில்லை! முன்னதாகவே சொல்லி அனுப்பி இருக்கக் கூடாதா? இப்படி திடீரென்று வந்து விட்டீர்களே!"

நிதி: இல்லையண்ணா! ஏதோ உங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன்—தனிமையில் பேச வேண்டும் என்று எண்ணினேன் – அதனால் தான் உடனேயே வந்து விட்டேன்!

[அண்ணா இதற்குப் பதில் சொல்லவில்லை—ஒரு புன்னகை தான் இதற்கு பதிலாக வந்தது]

நிதி: "இன்று பத்திரிகை பார்த்தீர்களா?

அ; "இல்லையே! என்ன விசேஷம்?"

நிதி: "ஒன்றுமில்லை – பார்த்தீர்களா என்றேன்!"

அ: நீங்கள் கேட்டதைப் பார்த்தால் ஏதாவது விசேஷம் இருக்குமோ என்று நினைத்தேன்!

நிதி: உங்களிடம் இன்றைய பத்திரிகை இருக்கிறதா?

அ: ஓ! இருக்கிறதே!

[அதற்குள் அங்குள்ள தோழர் ஒருவர் இரண்டு கிளாசில் டீ கொண்டு வந்து அண்ணாவுக்கும், நிதி அமைச்சருக்கும் கொடுத்தார்! நிதி அமைச்சர் டீயை குடிக்காமலேயே வைத்திருந்தார்!]

அ: "டீ சாப்பிடுகள்!"

நிதி: "இல்லை! பரவாயில்லை"

அ: "சும்மா சாப்பிடுங்கள்!"

நிதி: "டீ பிடிக்காது – பழக்கமில்லை"

அ: எழுத்தாளர்கள் வீட்டில் டீ தான் எப்போதும் இருக்கும்!

நிதி: "ஆமாம், ஆமாம்!"

[உடனே குளிர்ந்த பானம் கொண்டு வரப்பட்டு நிதி அமைச்சர் சாப்பிடுகிறார்.]

அ: இன்றைய பத்திரிகைகளை கேட்டீர்களே!

நிதி: இந்த செய்தியைப் படியுங்கள்!

[செய்திப் பத்திரிகையில் நிதி அமைச்சர் காட்டிய இடத்தைப் படித்துப் பார்க்கிறார். படித்து விட்டு ஏதும் பதில் சொல்லவில்லை! உதடு ஒரு புன்னகையையும்—கண்கள் ஒரு குறும்புப் பார்வையையும் தந்தன! நிதி அமைச்சர் திடுக்கிட்டு ஒன்றும் பதில் சொல்லவில்லையே என்று விழித்தபடியே]

நிதி: "எப்படி?"

(அண்ணா விடமிருந்து இப்போதும் பதிலில்லை—ஒரு புன்னகைதான்)

நிதி; "நான் உங்களுக்கு ஒன்றும் தொந்திரவு கொடுக்கவில்லையே?'

அ: அதெல்லாம் ஒன்றுமில்லை! சொல்லுங்கள்?"

நிதி: "வியாபாரிகள் மாநாட்டில் நான் பேசியது சரி தானே?"

அ: "உங்களுக்கே அது சரி என்று படும் போது எனக்கு எப்படி சரியில்லாமல் இருக்கும்?

நிதி: இதெல்லாம் அண்ணா! பேச வேண்டிய இடத்தில் பேசவேண்டும்! அப்போது தான் சரியான பலன் கிடைக்கும்!

அ: "அது சரிதான்!"

நிதி: "என்னுடைய பேச்சை ஊன்றி கவனித்தீர்களா?"

அ: "ஓ! கவனித்தேனே!"

நிதி: "தென் நாட்டில் நிலக்கரி இல்லாமல்இருக்கலாம்-ஆனால் தேனிரும்பு, பழைய இரும்பு இவைகளை உபயோகித்து ஒரு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம் என்று சொல்லி இருக்கிறேன் — பார்த்தீர்களா?"

அ: "இப்படியெல்லாம் பேசவதால்......?"

நிதி: "என்னை என்னண்ணா செய்ய முடியும்? நானும் பொறுத்துப்பொறுத்து தான் பார்த்தேன் — சண்டையிட்டேன், சமாதானமாகக் கேட்டேன் பலன் கிட்டவில்லை! நிலக்கரி இல்லைநிலக்கரிஇல்லை என்றேபதில்சொல்லி வந்தார்கள்! அதனால் தான்தேனிரும்பைக்கொண்டாவது உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்துங்கள் என்று கூறினேன்!"

அ; "உங்கள் பதவியையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்!

நிதி: நீங்கள் என்ன அண்ணா! பதவியாவது மண்ணாங் கட்டியாவது! அப்படித்தான் இவர்கள் என்னை என்ன பண்ண முடியும்? என்னை விட்டால் இவர்களுக்கு வேறு கதிதான் யாரு?

(அண்ணா உதட்டோடு சிரிக்கிறார்.)

நிதி: நீங்கள் மட்டும் என்னோடு கொஞ்சம் ஒத்துழைத்தால் எவ்வளவோ பெரிய காரியங்களையெல்லாம்செய்து காட்டுவேன்!"

அ; எங்களுடைய உதவி உங்களுக்கு......?

நிதி: இல்லை அண்ணா! இப்போதுகூட உங்களைக்காட்டித் தானே சண்டை போடுகிறேன்! தென்னாடு பிரிந்து விடும், பிரிந்தால் நமக்கெல்

(5-ம் பக்கம் பார்க்க)

நிதி அமைச்சர் சிரித்தார்! டி. கே. ஷண்முகம் அழுதார்!

தமிழகத்தின் தலை சிறந்த ஓவியரான திரு. மாதவன் அவர்கட்கு அறிஞர் அண்ணா அவர்கள் பட்டம் வழங்கும் விழாவில் நிதி அமைச்சர் கனம் சுப்பிரமணியம் கலந்து கொண்டு, தலைமை வகிக்கும் பொறுப்பையும் ஏற்று—"சினிமா சுவரொட்டிகள் ஆபாசமாகஇருக்கிறது, அது நீக்கப்படவேண்டும்" என்று கூறினார்!

இதற்கு அண்ணா அவர்கள் "எது ஆபாசம், ஆபாசம் என்றால் எதைக் குறிக்கிறது" என்பதை விளக்கிப் பேசிக்கொண்டு வருகையில் ஒரு ருசிகரமான நிகழ்ச்சி நடைபெற்றது!

"நான் இப்படிப் பேசுவதால் அமைச்சர் பயப்படத் தேவையில்லை—**இன்னமும் ராகு காலத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் கலைஞர்கள் உண்டு!** என்று அண்ணா அவர்கள் பேசிக்கொண்டே போனார்கள்!

இந்த சந்தர்ப்பத்தில் மேடையில் நிதி அமைச்சருக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த டி. கே. ஷண்முகத்தைப் பார்த்து நிதி அமைச்சர் விழுந்துவிழுந்து சிரித்தார்! ஆனால் ஷண்முகத்தின் உதட்டில் மட்டும் ஒரு சிரிப்புக் கோடு கூட விழவில்லை!

திருவாளர் ஷண்முகத்திற்கு எப்படி சிரிப்பு வரும்! "அண்ணாதுரைதான் நம்மை கிண்டலும், கேலியும் செய்து பேசுகிறார் என்றால்—இந்த நிதி அமைச்சருமா கேலி செய்யவேண்டும், பரிகாசம் செய்ய வேண்டும் என்று வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் ஷண்முகத்திற்கு எப்படி சிரிப்பு வரும்!

ஷண்முகம் சிரிக்கவில்லை! என்றாலும் நிதி அமைச்சர் அவரைப் பார்த்து சிரித்தபடியே இருந்தார்!

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லாம் பெரிய ஆபத்து வந்து விடும் – பிறகு இந்தியாவை ஒன்று சேர்க்க முடியாது என்று தானே அண்ணு சொல்லுகிறேன்! இப்படி சொல்லுவதால் தான் சில காரியங்களை யாவது சாதிக்க முடிகிறது!

அ: மெத்த மகிழ்ச்சி! நாங்கள் உங்களுக்குப் பயன் பட்டால் சரி தான்!

நிதி: என்னண்ணு இப்படி சொல்லுகிறீர்கள்? நான் மட்டும் யார் என்று நினைக்கிறீர்கள்? மொழிப்பற்று இல்லாதவனு? இனப்பற்று இல்லாதவனு? சொந்த மண் மீது ஆசையில்லாதவனு? வடநாட்டுக்காரனோடு ஒன்ருக தலை முறை தலை முறையாக வாழ வேண்டும் என்று நினைக்கிறவனு? சில பலகாலத்திற்கு அவர்களோடு சேர்ந்திருந்தால் சில பல காரியங்களை சாதித்துக்கொள்ளலாம்! அதற்குப் பிறகு பிரிந்து போகிறோம் என்று திட்ட வட்டமாகச் சொன்னுல் போகிறது! காரியம் தானே அண்ணு பெரிசு?''

அ: உண்மை தான்!

நிதி: தென்னுட்டில் எப்படியும் ஒரு இரண்டுமூன்று உருக்குத் தொழிற்சாலை, கச்சா பிலிம் தொழிற்சாலை — இன்னும் கனரக தொழிற்சாலைகளையாவது ஏற்படுத்தி விட வேண்டும் என்று தானண்ணு நினைக்கிறேன்!

அ; நீங்கள் நினைப்பது சரி தான்—ஆனுல் கிடைக்குமா?

நிதி: ஏன் அண்ணு கிடைக்காது? முடிந்த வரையில் சண்டை போடுவோம்! கிடைத்த வரையில் பெறுவோம்! கடைசியில் தென்னுட்டைப் பிரித்துக கொடு என்று கேட்போம்! இல்லையென்ருல் அவர்கள் கற்றுக் கொடுத்த ஆகஸ்டு போராட்டம் இருக்கவே இருக்கிறது!

(அண்ணு பதில் சொல்லாமலேயே மௌனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருக்கிருர்)

நிதி: "ஏன் பதிலே சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்?''

அ: "இல்லை, இல்லை! நீங்கள் சொல்வதை யெல்லாம் கவனித்து அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன்!

நிதி; என்ன யோசிக்கிறீர்கள்? சுப்பிரமணியமா இப்படி பேசுகிருர் என்ரு? இதிலெல்லாம் உங்களை விட நூறு பங்கு தீவிரம் அண்ணு! இன்று கூட உங்களோடு வந்து விடுவேன்! நமக்கு காரியமாக வேண்டாம்!

அ: அதெல்லாம் சரி தான்!

நிதி: என்னுடைய பேச்சு உங்களை யெல்லாம் விட ஒரு படி அதிகமாகவே சில பல இடங்களில் இருந்திருக்குமே! பார்த்திருப்பீர்களே!

அ: ஆமாம், ஆமாம்!

நிதி: "இதெல்லாம் இந்த ஆசைத் தம்பிக்கு புரிய மாட்டேன் என்கிறது! நான் ஒப்புக்கு சவால் விட்டால்— உங்களுக்கு பரமவிரோதி என்று அவர்கள் நினைக்கட்டும் என்று சவால் விட்டால்— ஆசைத்தம்பி எதிர் சவால் விடுகிருர்!

அ: ஆசைத் தம்பிக்கு ஒன்றும் புரியாது! நீங்கள் எதற்காக இப்படி சவால் விடுகிறீர்கள், எதற்காக பிரிவினை கூடாது என்று பேசுகிறீர்கள் என்பதை யெல்லாம் அவர் சரியாக புரிந்து கொள்ள வில்லை! அதற்காக வருத்தப் படாதீர்கள்!

நிதி: நான், எங்கெந்த இடத்தில் பலன் அளிக்குமோ அங்கெல்லாம் தென்னுட்டில் தொழில் வளம் பெருக வேண்டும், அதற்கு மத்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்று கூறிவருகிறேனே? பார்த்திருக்கிறீர்களா?

அ: "ஆமாம் ஆமாம்! பார்த்திருக்கிறேன்!''

நிதி: காங்கிரஸ்காரர்கள் நடத்தும் கூட்டம், காங்கிரஸ் கட்சிக் கூட்டம் இங்கெல்லாம் உங்களுக்கு சவால் விட்டால் தான் என்னை நம்புவார்கள்— அதனுல் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், உங்களைப் பற்றியும் திட்டிப் பேசி வருகிறேன்!''

அ: " அதனுலென்ன — பரவாயில்லை!''

நிதி: "ஆசைத் தம்பி போன்றவர் இதை உண்மை என்றே எண்ணி எனக்கு சவால் விடுகிருர்கள்! கொஞ்சம் ஆசைத்தம்பியிடம் சொல்லுங்களண்ணு!''

அ: சொல்றேன், சொல்றேன்!

நிதி; இன்னும் கொஞ்ச நாளைக்கு தானே அண்ணு! நேரு இருக்கிற வரையில் தானே காங்கிரஸ்! அதன் பிறகு எல்லோரும் உங்கள் கட்சி தானே!

அ: "அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை! அங்கே எத்தனை பேரோ இருக்கிருர்கள்?''

நிதி: "இல்லையண்ணு! மற்றவர்கள் ரொம்ப வெறிபிடித்தவர்கள் நம்மோடு சுமுகமாக இருக்க மாட்டார்கள்! நேரு காலத்திற்குள்ளேயே சில வசதிகளை நாம் தேடிக் கொண்டு விடுவோம்! பிறகு மூன்றே நாள் தென்னுடு தனி நாடாகி விடும்!''

அ: "ரொம்ப நல்லது!''

நிதி: "ஏனண்ணு! அடுத்த தேர்தலில் எத்தனைபேர்களை நிறுத்தப் போகிறீர்கள்?''

அ: "ஏதோ முடிந்த வரையில் நிறுத்தலாம் என்று நினைக்கிறோம்!''

நிதி: "எத்தனை பேர்கள் வரலாம் அண்ணு!

அ: இப்போது எப்படி சொல்ல முடியும்?''

நிதி: "இல்லையண்ணு! நிச்சயமாக ஒரு நூறு பேராவது வரலாம்!''

அ: "அவ்வளவெல்லாம் கிடைக்காது!''

நிது: "இல்லையண்ணு! நிச்சயமாக கிடைக்கலாம்! எந்த ஊருக்குப் போனுலும் உங்கள் ஆட்கள் தானே அதிகமாக இருக்கிருர்கள்!''

அ. "ஆட்கள் இருந்து என்ன பிரயோசனம்? கூட்டம் தான் எங்களுக்கு –ஓட்டுகள் உங்களுக்குத் தானே!''

6-ம் பக்கம் பார்க்க

வாழ்க ரோஷம்! வாழ்க மானம்!!

சென்னை மாநிலத்தில் இயங்கி வரும் மாநில சர்க்கார்—கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்துசபையைப் போல, நகரங்களில் இருக்கும் நகர சபையைப் போல, சென்னையிலிருக்கும் மாநகர சபையைப் போல எந்த வித அதிகாரமுமின்றி—எல்லா அதிகாரங்களையும் டில்லி அரச பீடத்தில் ஒப்புவித்து விட்டு—எதற்கும் அவர்களுடைய தயவையே நாடி உயிர் வாழவேண்டிய வகையில் அமைந்திருக்கிறது என்று எண்ணிக்கையில் அடங்காத மேடைகளில் எடுத்துரைத்திருக்கிறோம்!

"இல்லை இல்லை! சுத்தப் பொய்! நாங்கள் அடிமைகளில்லை! சுதந்திர வீரர்கள்! அவர்கள் தான் எங்களுக்கு அடிமைகள்'' என்று சென்னையில் ஏற்கனவே இருந்த அமைச்சர்களும், இப்போது இருக்கிற அமைச்சர்களும் பேசி வந்தார்கள்— பேசி வருகிருர்கள்—இனியும் பேசுவார்கள்!

ரோஷமே பிறக்காத பக்தவத்சலத்திற்கு எப்படியோ ரோஷம் பிறந்துவிட்டது! மானத்தைப் பற்றியே கவலைப்படாத மந்திரி பக்தவத்சலத்திற்கு எப்படியோ மானம் குதித்துக்கொண்டு ஓடி வருகிறது! "நமக்கு மத்திய சர்க்கார் சுதந்திரமே கொடுக்கவில்லை'' என்று புத்தருக்கு ஏற்பட்ட ஞானேதயம்போல் திடீரென்று ஏற்பட்டிருக்கிறது!

"சமூக நல வளர்ச்சிக்காக ஒரு பேராசையான திட்டத்தை நிறைவேற்றுகையில் தாமதங்களை நாம் நிச்சயம் தவிர்க்கவேண்டும்! ஆனுல் திட்டங்களை வகுப்பதில் அகில இந்திய அடிப்படை பற்றி—அளவுக்கு மீறிய கண்டிப்பும், கட்டுப்பாடும் இருக்கிறது! இது கூடாது! இது குறித்து சென்னை சர்க்கார் யோசனை யொன்றும் கூறி இருக்கிறது! வேண்டுமானுல் மத்திய சர்க்கார் ஒரு விரிவான அடிப்படையை நிர்ணயிக்கட்டும்! ஆனுல் நோக்கங்களுக்கு ஒப்ப—திட்டங்களை மாற்றி அமைத்துக் கொள்ள மாநில சர்க்காருக்கு **சுதந்திரம்** இருக்க வேண்டும்!

அமைச்சரின் கடைசி வார்த்தையைப் படியுங்கள்! மாநில சர்க்காருக்கு சுதந்திரம் இருக்க வேண்டுமாம்! அப்படியென்ருல் இதுவரை அடிமைகளாகத்தானே இருந்து வருகிறீர்கள்...?

இதுவரையில்லாத ரோஷம் பக்தவத்சலத்திற்கு இப்போது பிறப்பானேன்?

இன்று தனக்கும், தன் மந்திரி சபைக்கும் சுதந்திரம் கேட்கும் பக்தவத்சலம் நாளை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சுதந்திரம் கேட்க மாட்டார் என்று என்ன நிச்சயம்?

அப்படி என்ருல் திராவிட நாடு கேட்கமாட்டார் என்பதற்கு என்ன உறுதி!

வாழ்க ரோஷம்!

வாழ்க மானம்!

செந்தமிழ்க் காவியங்களை ஓவியங்களாக வரையுங்கள்!

பைந்தமிழ்க் கலைஞர்களின் வறுமையைப் போக்குங்கள்!

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி)

காலம் இருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டும்.

நமது நிதியமைச்சர் ரொம்ப யூக சாலி! அதன் காரணமாகத் தான் அவர் என்னிடம் பணத்தை மட்டும் கேட்காதீர்கள் வேறு எந்த உதவி வேண்டுமானாலும் கேளுங்கள் என்று கூறினார்.

ஓவியத்திறன் பணம் கொடுத்துத்தான் வளர்க்கப்பட வேண்டுமென்பதில்லை! தற்போதுள்ள மக்களாட்சி காலத்தில் இந்தக் கலையிலே ஈடுபட்டிருப்பவர்கள் தட்டுப்பாடின்றி வாழ வழி செய்ய வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் அந்தக் கலையை மேன் மேலும் வளரச் செய்யலாம்! 'கலை ஆர்வத்தின் காரணமாக கலை வளர்ச்சிக்காக பணம் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும்" நினைப்பதும் சரியல்ல!

நெல்லைச் சீமையிலே உள்ள பத்தமடை எனும் ஊரில் மிக நேர்த்தியான பாய்கள் பின்னப்படுவதாகவும், இந்த பாய்கள் முடைவதற்காக 140ம் நெம்பர் முதல் 200ம் நெம்பர் எண்ணிக்கையுள்ள நார்கள் உபயோகப் படுத்துவதாகவும், இந்த பாய்களை சுருட்டி சட்டைக்குள் வைத்துக் கொள்ள முடியுமென்றும் இப்படிப்பட்ட நேர்த்தியான பாய்களை பின்னுபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு எட்டணா கூலி கிடைப்பதாகவும் ஏட்டிலே வாசித்தேன்! இப்படிப்பட்ட அருமையான கலை—அவர்களுக்குள்ள கலை ஆர்வத்தின் காரணமாக வளர்ந்து கொண்டே போகுமென்று சொல்லி விட முடியாது! காலப் போக்கிலும் பணத்தின் மீது உள்ள நம்பிக்கையாலும் இந்த கலை மறைந்து விடலாம்! அதே போலத் தான் இன்று ஓவியக் கலையும் உள்ளது, ஓவியக்கலைக்கு மிகவும் ஆதரவு தந்து வந்த, நாடகக் கலைக்கு, நாட்டிலே செல்வாக்கு குறைந்து விட்டது! செல்வாக்குக் குறைந்து விட்ட காரணத்தால் நாடகக் குழுக்களை பலர் கலைத்து விட்டார்கள். இதனால் நாடகக்கலை மூலம் ஓவியர்களுக்கு இருந்த ஆதரவும் போய் விட்டது. நாடகக்குழுக்கள் கலைக்கப் பட்டு விட்ட காரணத்தால், ஓவியக்கலை வளர்வதற்கு இருந்த வாய்ப்பு போனதால், ஓவியக்கலை வளர இப்போது வழிவகைகள் இல்லாமலிருக்கிறது. ஓவியக்கலை வளர இப்போதுள்ள ஒரே வாய்ப்பு சினிமா விளம்பரங்கள் தான். இதை ஒளித்தும் மறைத்தும் பயன் இல்லை. சினிமாவின் மூலம் ஓவியத்திறமையைக் கலைஞர்கள் காட்ட இயலாது! அவர்களுடைய கைவண்ணத்திற்கும், கற்பனைத்திறனுக்கும் இங்கு இடமில்லை. நடிகர்கள் எந்தெந்த வகையில் நடிக்கிறார்களோ அந்த வகையில் தான் ஓவியம் தீட்டப்படவேண்டும் ஓவியக்கலை வளர, சர்க்கார் தான் பொறுப்பு என்பதல்லாமல்—வேறுயாராவது ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி அந்த அரிய காரியத்தை மேற்கொண்டால் தான் ஓவியக்கலை வளரும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதாவது காவியக்காலத்திலிருந்தே சிற்பக் கலையும் காவியத்திறனும் சிறந்தோங்கியிருந்தன. இப்படி காவியக்கலையிலும் சிற்பக்கலையிலும் நல்ல திறமையும் பெற்றிருந்தவர்கள் இருந்தும் கூட அவர்களது திறமையும், ஆற்றலும் வெளிப்பட வழி வகைகள் இல்லாதிருந்தன. இப்படிப்பட்ட விழாக்கள் நடத்துவதன் மூலம் நம்மை நாடாள்வோர் கவனிக்கின்றனர்! என்பதை அறிந்து கொள்வதற்குத்தான் பொன்னாடை போர்த்தலும், பட்டம் வழங்குதலும், பாராட்டுரை வழங்குதலும் போன்ற விழாக்களை நடத்தப் படுகின்றது.

நானும் நமது நிதியமைச்சரும் ஒத்துப் போகக்கூடிய கருத்து ஆயிரத்தில் ஒன்று தான் இருக்கும். இந்த விழாவிலும் எங்கள் இருவருக்கும் கலை வளர வேண்டும் என்ற ஒரு கருத்தில் நாங்கள் இருவரும் ஒருமித்து உள்ளோம். ஆனால் இதை விளக்கினால் எங்கள் இருவருக்கும் உள்ள கருத்து ஒற்றுமை ஒருவேளை மாறுபட்டாலும் மாறுபடலாமென்று நினைக்கிறேன்!

கலைத்துறையிலே ஆபாசம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நல்லுறை பலரால் கூறப்பட்டது. அமைச்சர் சுப்ரமணியமும் கலைத்துறையில் ஆபாசம் இருக்கக் கூடாது என்று கூறினார். இதில் எனக்கும் அவருக்கும் கருத்து வேற்றுமை கிடையாது.

ஆபாசம் என்பது அல்லது தரக் குறைவு என்று சொல்வதற்கு முழு உண்மைப் பொருள் கிடைப்பதில்லை. இது இது ஆபாசம் இது இது உயர்வு. இதைப் பார்த்தால் கெட்டு விடுவோம்—என்று கருதப்படுகிறது. இது அவரவர் மனப்பக்குவத்திற்கு ஏற்றபடி கொள்ளப்படுகிறது.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். மேல் நாடுகளில் ஆடை அணிவதில் பெண்கள் மிகச் சிக்கனமான முறையைக் கையாளுவதன் காரணமாக அவர்களது அங்கங்கள் நன்ருக பார்ப்பவர்கள் கண்களில் படுகிறது. இதை இப்போது ஆபாசமாக கருதுவதில்லை. காரணம் இது அவர்களுக்கு மிக மிகச் சாதாரணமாகி விட்டது. ஆனால் இங்கிலாந்திலே பல ஆண்டுகளுக்கு முன், நாட்டை ஆண்டு வந்த எலிஸபெத் ராணி உச்சி முதல் உள்ளங்கால் வரை படுதாவைப் போன்ற உடுப்பை உடுத்தி இருந்தார். வெட்ட வெளிச்சமாக சொல்ல வேண்டுமானால் ஒரு துளியும் ஆபாசமில்லாமல் ஆடை அணிந்து வந்தார்கள்! ஆனால் அந்த ராணி கையிலிருந்த ஒரு சின்னஞ் சிறு விசிறியை மட்டும் பார்த்தால் சபல புத்திக் கொள்வார்களாம்! அந்த விசிறியைவைத்திருந்ததற்குமேல் நாட்டவர்கள் எத்தனை எத்தனையோ விமர்சனம் செய்து அதைப்பற்றி குறை கூறியுள்ளார்கள்.

ஒன்றைப் பார்க்கும் போது இதைப் பார்த்தால் ஆபாசமாக இருக்கிறது என்று சிலர் சொல்லுவர். ஆனால் அதையே பார்க்கும் வேறு சிலர் இதுதானே பரவாயில்லை இது ஒன்றும் ஆபாசமாக இல்லை என்று கூறுவர். ஒரு சிலர் ஆபாச மென்று கருதுவதை வேறு சிலர் ஆபாசமில்லை என்று கருதுகிறார்களென்றால் அவர்களுடைய மனம் அந்த அளவிற்கு பக்குவம் அடைந்துள்ளது என்பதுதானே தவிர வேறு ஒன்றுமில்லை.

இதனால் இத்தகைய மனப்பக்குவம் அடையாதவர்கள் அத்தனை பேரும் பத்தரைமாத்து தங்கம் என்று கூறிவிட நான் தயராயில்லை,

கொல்லி மலையிலே சிற்பியொருவன் பாவை யொருத்தியின் சிற்பத்தை செதுக்கியிருந்தானும். இந்த ஆரணங்கின் சிலை பலரது கவனத்தையும் இழுக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்ததாம். பலர் சிலைக்கு வெகு தூரத்திலிருந்து வருகின்ற நேரத்திலேயே இந்த சிலையைப் பார்த்து பார்த்து அப்படியே மயங்கி இறந்துபடுவார்களாம். சிலையைப் பார்க்கின்ற நேரத்திலேயே பலரது சிந்தனை அறுபட்டு அந்த சிலையின் மீதே மக்களின் எண்ணம் முழுவதும் திருப்பபட்டு விடுமாம். இந்த சிலையை பார்க்கின்றவர்கள் அனைவரது சலனமும் தடைபட்டு அப்படியே மயங்கி இறந்து விடுவார்களாம். இதனாலேயே கொல்லிமலைப் பாவை என்ற பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்த சிலையை பார்த்தவர்கள் இறந்து விட்டார்களென்றால் இந்த சிற்பத்தை செதுக்கிய சிற்பி இந்த சிற்பத்தை பார்ப்பவர்கள் இறந்து விட வேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த சிலையை செதுக்கியிருக்க முடியாது,

நாடகத்தில் சாப்பிடுவதை காட்ட முடியுமே தவிர புளிக்கின்றதையும் காட்ட முடியாது, நண்பர் ஷண்முகம் நடத்திய ஒரே நாடகத்தில் தான் அவரது தமையன் சாப்பிடும் காட்சியும் புளிக்கிற காட்சியும் காட்டப்படுகிறது. இந்த நாடகத்திலே ஷண்முகத்தின் தமையன் ஒரு காட்சியிலே சாப்பிடுவார். அப்படிச் சாப்பிடும் போது அவருக்கு புளிப்பேற்படுகின்றது. இப்படி புளிப்பேற்படுகின்ற காட்சி முடிந்து அடுத்த காட்சி

8-ம் பக்கம் பார்க்க

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

நிதி: என்னண்ணு! அவர் ஏதோ பழைய காலத்தை நினைத்து பேசினு? அதைவேறு போய் நம்புரிங்களா! அது கிடக்கட்டும் அண்ணு! எத்தனை இரும்புத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம் — எங்கெங்கே ஏற்படுத்தலாம்?

அ: எனக்கு அவ்வளவு தூரம் புள்ளி விபரம் தெரியாதே!

நிதி: என்னண்ணு! எதை எதையோ குத்திக்காட்டுகிறீர்களே! ஒருயோசனை தானே கேட்கிறேன்!

அ: நல்ல ஆராய்ச்சி நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து, தக்க இடத்தில், தக்க தொழிற்சாலைகளை ஏற்படுத்துங்கள்!

நிதி: "அப்படியே செய்கிறேன்!" இந்தி எதிர்ப்பு போராட்டத்தை எப்போது துவக்கப் போகிறீர்கள்!

அ: தக்க சமயத்தில் துவக்கலாம் என்று நினைக்கிறேம்!

நிதி; இந்தத்தடவை தீவிரமாக நடத்துங்களண்ணு! வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!

அ: "வெற்றி கிடைக்கிறதோ இல்லையோ—எங்கள் கடமையை நிச்சயமாக செய்வோம்!

நிதி: ஏனண்ணு! சந்தேகப் படுகிறீர்கள்! வெற்றி நிச்சயம் கிடைக்கும்!
எனக்குக் கூட பிடிக்கவில்லையண்ணு! விரைவிலேயே ராஜினுமா செய்து விட்டு . . . !

அ: வேண்டாம்! அப்படியெல்லாம் செய்ய வேண்டாம்! பதவிபொறுப் பேற்கிற நேரத்தில் சொல்லி அனுப்புகிறேம்!

நிதி: நான் சிலபல நேரங்களில் உங்களைத் தாக்கிப் பேசுவது பற்றி என் மீது வருத்தமோ, கோபமோ கொள்ளாதீர்கள்!" வட நாடு வாழ்கிறது தென்னுடு தேய்கிறது" என்று சொல்லுவது அபத்தம் என்று தான் எங்கள் கூட்டத்தில் பேசுவேன்! அதை உண்மை என்று நினைக்க வேண்டாம்! சில முக்கிய இடங்களில் என்னுடைய உண்மையான கருத்துகளைத் தெரிவித்து தென்னுட்டின் மீது உள்ள பாசத்தைக் காட்டிக் கொள்ள தவறவே மாட்டேன்!

அ: உங்கள் மீது எப்போதும் நான் தவருக நினைக்கமாட்டேன்! உங்களைப் போன்றவர்கள் அப்படித்தான் பேச வேண்டும்!

நிதி: நான் இங்கு வந்ததைப் பற்றி யாரிடமும் சொல்லாதீர்கள்! ரகசியமாகவே இருக்கட்டும்! ஓய்வு நேரத்தில் உங்களை அடிக்கடி சந்திக்கிறேன்!

அ; கவலைப்படாதீர்கள்! நான் யாரிடமும் சொல்ல மாட்டேன்! அடிக்கடி வந்து போங்கள்!

நிதி: வருகிறேன் அண்ணு!

(நிதி அமைச்சர் புறப்படுகிருர்! இந்த நேரத்தில் ஆசைதம்பியும், கருணுநிதியும் உள்ளே நுழைகிருர்கள்! நிதி அமைச்சர் பேந்தப் பேந்த விழிக்கிருர்)

நிதி: வணக்கம்! வருகிறேன் அண்ணு!

அ: வணக்கம்!

சினிமா சுவரொட்டிகளில் ஆபாசம் ஒழிந்தால் போதாது! கடவுளர்களின் ஓவியத்திலும் அது ஒழிய வேண்டும்!

மேடையிலிருந்த நிதி அமைச்சருக்கு கலைஞர் கருணாநிதி அளித்த பதில்!

[சென்னை ஓவியர் சங்கத்தின் ஆண்டு விழாவில் ஓவியத்தின் பெருமையைப் பற்றி கலைஞர் கருணாநிதி ஆற்றிய சொற்பொழிவு]

அன்புள்ள விழாத் தலைவர் அவர்களே! அருமை அண்ணா அவர்களே! மற்றுமுள்ள நண்பர்களே! . . .

ஓவியர் சங்கத்தின் ஆண்டு விழாவில் ஓவியர் விற்பன்னர் மாதவன் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி.பட்டம்வழங்கி பாராட்டுவதைக் கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன், இந்த நேரத்தில் மாதவன் அவர்களைப் பாராட்ட நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்தில் ஓவிய மன்னருக்கு அளிக்கப்படும் பட்டமளிப்புக் காட்சியையும், விழா நிகழ்ச்சியையும், அறிஞர்களின் சொற்பொழிவையும் காண ஆயிரக் கணக்கில் திரண்டு வந்திருக்கிறீர்கள். இதைக் கண்டு நான் பெருமையும், பூரிப்பும் கொள்ளுகிறேன். ஆனால் இவ்வளவு சீரும், சிறப்போடும் நடைபெறுகின்ற இந்த விழா வினைக்காண வெளியிலே ஆயிரக் கணக்கான மக்கள் காத்து நின்று கொண்டிருக்கின்றனர், நாங்கள் வெளியிலிருந்து உள்ளே நுழையும் போது மக்கள் எங்களைப் பார்த்து—"நாங்களும் இந்த விழாவைக் கண்டு ரசிக்க வேண்டும், பார்க்க வேண்டும்—எனவே உள்ளே அனுமதிக்கும்படி சொல்லுங்கள் என்றார்கள்! "சரி சொல்லுகிறோம்" என்று அவர்களிடம் சொல்லி விட்டு உள்ளே வந்தோம்! ஓவியர் சங்கத்தாரிடம் கேட்டோம்! ஆனால் வெளியில் இருக்கிற மக்கள் அனைவரும் உள்ளே வந்து விழாவினைக் கண்டு களிப்பதற்கேற்ற இட வசதி இங்கில்லை. எனவே இங்கு நிகழ்த்தப்படுகின்ற சொற்பொழிவுகளை மட்டும் கேட்டு மக்கள் மகிழ்ச்சியடைய ஒலிபெருக்கி வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது! இதை எதற்காக நான் குறிப்பிடுகிறேன் என்றால் இங்கு நடைபெறுகின்ற சொற்பொழிவுகளை வெளியில் ஏராளமான மக்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்—மாதவனுடைய பெருமையைப்பற்றி, புகழைப் பற்றி மக்களும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டத்தான்!

வெளியில் கூடி மாதவனுடைய பட்டமளிப்பு சொற்பொழிவை கேட்டுக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்கள்-இந்த விழாவை நேரில் காண வேண்டும், இங்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை கண்ணால் பார்க்க வேண்டும் என்று கருதாமல்—பேரறிஞர்களின் சொற்பொழிவை மட்டும் கேட்டு மகிழ்ச்சியடைய வேண்டும்-"தயவு செய்து-இப்பொழுதும், விழா நடை பெற்ற பின்பும் அமைதியாக இருக்க வேண்டும்-இந்த விழாவை சீரும், சிறப்போடும் நடத்த வேண்டும்" என்று தாழ்மையோடு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

ஓவியர் மாதவன் அவர்களைப் பல ஆண்டுகளுக்கு முன்பே அறியா விட்டாலும், சில ஆண்டுகளாக அறிவேன்! கலைவாணரின் மூலம் மாதவன் அவர்களை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது!

எத்தனையோ ஓவியர்கள் இருக்கிறார்கள்! எத்தனையோ திறமைப் படைத்த ஓவியர்கள் தமிழகத்தில் உண்டு! மாதவன் வர்ணம் படாத ஓவியம் சிறக்காது! மாதவன் தூரிகை படாத ஓவியம் பெருமை யளிக்காது! பத்திரிகைகள், மாத வெளியீடுகள் அனைத்தும் மாதவன் ஓவியம் என்றால் தான் சிறப்பாக இருக்கின்றன! மலர் வெளியிட வேண்டுமென்றால் மாதவன் ஓவியம் தான் தேவை என்று நினைக்கிறார்கள்! மலருக்கு மணம் வேண்டுமென்றால் மாதவனுடைய ஓவியம் தேவை! பத்திரிகை ஓவியமானாலும், நாடக ஓவியமானாலும் சரி, திரைப்பட ஓவியமானாலும் சரி சாலச் சிறப்புடையது மாதவனுடைய ஓவியம் தான்!

ஓவியம் இந்த நாட்டின் கருத்துக் கலையாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது!

"ஓவியத்தின் மூலம், திருடனைக் கண்டு பிடிக்க முடியும், போலீஸ் வேலை கூட செய்ய முடியும்" என பத்திரிகை செய்தி யொன்றைப் படித்தேன்

அமெரிக்காவில் சிகாகோ நகரத்தில் திருட்டு. கொலை, களவு முதலியவற்றை—ஓவியப் படங்கள் மூலம் கண்டு பிடிக்கப் பட்டதாம்!

இன்ன இடத்தில் திருட்டு நடைபெற்றிருக்கிறது என்றால் அதுசம்பந்தப்பட்டவன்-அல்லது திருடன், அல்லது கொலை செய்யப்பட்டவனுடைய் உருவத்தைக் கேட்டு-திருடியவனுடைய மூக்கு இப்படி இருக்கும், நீளம் இவ்வளவு இருக்கும் அவன் கண்கள் இப்படி இருக்கும், என்று அறிந்து -இதன் படி அவனை சித்திரம் வரைந்து அதைப் பத்திரிகைகளுக்கு அனுப்பி திருடனைக் கண்டு பிடிக்க முடியுமென்று சொல்லப் படுகிறது!

இங்கே நிதி அமைச்சருக்குப் பதில் போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம் வந்திருந்தால் "என்ன ஓவியத்தின் மூலமா திருட்டைக் கண்டு பிடிக்க முடியும்" என ஆச்சரியப்பட்டிருப்பார்!

கிரேக்க நாட்டில் ஓவியம் எந்த அளவு புகழப்படுகிறது, எந்த அளவு மதிக்கப்படுகிறது, என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை சொல்ல விரும்புகிறேன்!

கிரேக்கத்தில் ஓவியப்போட்டி ஒன்று நடைபெற்றதாம்! ஓவியம் தீட்டுவதில் யார் திறமைசாலி என அறிய சுக்கீஸ், தாராசீஸ் என்ற இரண்டு ஓவியர்களுக்குள் போட்டிப் பந்தயம் ஒன்று நடைபெற்றது! ஓவியத்தில் நிபுணர் யார்? சுக்கீசா? தாரசீசா? என்பதை மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று போட்டி நடைபெற்றது!

சுக்கீஸ் என்பவர் ஒரு திராட்சைக் குலையை ஓவியமாகத்தீட்டி வைத்திருந்தாராம்! பறவைகள் பறந்து ஓடி வந்து அந்த திராட்

2-ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in CEYLON
Regd. No·M. 7074 MALAIMANI Phone No: 83285

அமைச்சர் அச்சப்படத் தேவையில்லை

ராகு காலம் பார்க்கும் கலைஞர்கள் இன்னமும் இருக்கிறார்கள் !

6-ம் பக்கத்தின் தொடர்ச்சி

யிலே அவருக்கு பைத்தியம் பிடித்து விடும் (நிதி அமைச்சர் சிரிக்கிறார்,)

''தமிழ் இலக்கணத்தில் இடக்கரடக்கல் எனும் இலக்கண வரம்பு ஒன்று இருக்கின்றது. அந்த இலக்கண வரம்பிற்குட்பட்டுத் தான் இதுவரை காரியங்கள் எல்லாம் நடந்து வருகிறது, இதை அடுத்துத் தான் எது ஆபாசம் மெனக் கருதப்படுகிறதோ அவை மறைக்கப்படுகின்றன, அப்படி மறைக்க வேண்டியதை மறைத்து மக்கள் காணத் தகுந்ததை காட்சியாக்கும் நிகழ்ச்சிகள் தான் நடந்து வருகின்றன, இதில் நமது அமைச்சருக்கு எவ்வித ஐயம்பாடும் வேண்டாம். ஓவியக் கலைஞரைப் பார்த்து இதை எழுதாதே—அதை எழுதாதே—இது ஆபாசம்—அது ஆபாசம் என்று கூறினால் ஓவியக் கலைவளர முடியாமல் போய் விடும்.

இப்பொழுது தமிழ் நாட்டில் எந்தத் துறையிலும் தரம் குறைந்து வருவதாகப் பேசுகிறார்கள். உண்மை என்னவென்று ஆராய்ந்தால் தரம் குறைந்து விட்டது என்று சொல்லிவிட முடியாது. தரம் வளர்ந்து தானிருக்கிறது. பெரியவர்கள் அப்படித் தான் பேசுவார்கள், நமது பெரியோர்கள் நம்மைப் பாத்து ''எங்கள் காலத்தில் பள்ளிகளிலே இருந்த கல்வித்தரம் இப்போது இல்லை என்றுசொல்லுவார்கள்! நானும் என் மகனைப் பார்த்து ''எங்கள் காலத்தில் இருந்தது போல் இப்போது கல்வியின் தரம் இல்லை'' என்று தான் சொல்லுவேன்! அது போல அவனும் அவனது மகனுக்கு சொல்லுவான்! ஆனால் தரம் காலத்திற்கு காலம் குறைந்து வரவில்லை—தரத்தின் முறை தான் மாறிக் கொண்டிருக்கிறது! இது தான் உண்மை!

முதன் முதல் காங்கிரஸ் மந்திரிகளைப் பார்த்து ஜஸ்டிஸ் தலைவர் என்ன கூறினார்கள்!'' மந்திரி வேலைப்பார்க்க அந்தஸ்து வேண்டாமோ'' என்று தான் கூறினார்கள்! அந்த காலத்தில் நீதிக்கட்சி அமைச்சர்களை மக்கள் நெருங்க முடியாது! நெருங்காமல் இருப்பது தான் உயர்ந்த தரம் என்றும் நினைத்தார்கள்! நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் மாணவராக இருந்த காலத்தில்—இப்போது இவரிடம் நெருங்கிப் பழகுவது போல் இவர் நீதிக்கட்சி அமைச்சர்களை நெருங்கி இருக்க முடியாது! ஆனால் இப்போதுள்ள அமைச்சர்கள் மக்களோடு நெருங்கிப் பழகுகிறார்கள் என்றால் இன்றைய அமைச்சர்களின் தரம் குறைந்து விட்டதென்று சொல்ல முடியும்?

அமைச்சர்கள் மக்களுடன் பழகுவது தான் உயர்ந்த தரம் என்று கருதக் கூடிய காலமிது! தரம் குறையவில்லை! மாறி வருகிறது!

அந்த காலத்தில் சிற்பிகள் மலைகளுக்குச் சென்று சிற்றுளி கொண்டு கல்லை செதுக்கி ஆண்டுக் கணக்காகப் பாடுபட்டு சிற்பங்களை உருவாக்கினார்கள்! ஆனால் இந்தக் காலத்தில் சில மணி நேரங்களில் ''மோல்டிங்'' வேலையினால் சினிமாஸ்டியோக்களில் பல்வேறுவிதமான அழுகுச் சிற்பங்களை உருவாக்கி வருகிறார்கள்! இது தரக்குறைவல்ல—தரத்தின் மாற்றமாகும்!

முற்காலத்தில் ஓவியர்களைக் கொண்டு நாள் கணக்கில் எழுதக் கூடிய காட்சிகளை இன்று சில நிமிடங்களில் ''போட்டோ'' கருவி மூலம் படம் பிடிக்கச் செய்கிறார்கள்! இதனால் தரம் குறைந்து விட்டதாகக் கூற முடியாது—தரம் குறையாமல் முறைமாறி வருகிறது என்று தான் பொருளாகும்!

நடிப்புக் கலைக்கு மிக முக்கியமான ஒப்பனைக்கலை இங்கு இன்னும் நன்றாக வளர வேண்டும்! இங்கு எந்தப் பாத்திரத்தில் நடித்தாலும் ஒரேபாத்திரமாகத் தான் இருக்கிறது! மேல் நாட்டில் ஒப்பனைக் கலையின் மூலம் கலைஞர்களை பாத்திரத்தோடு பாத்திரமாக்கிக்காட்டுகிறார்கள்!

நான் இப்படி யெல்லாம் பேசுவதால் நிதி அமைச்சர் பயப்படத் தேவையில்லை! கலையுலகத்தில் ராகு காலத்தைப் பார்ப்பவர்கள் 100க்கு 98 பேர்கள் இருக்கிறார்கள்! (இந்த நேரத்தில் நிதி அமைச்சர் டி.கே, ஷண்முகத்தைப் பார்த்து விழுந்து, விழுந்து சிரிக்கிறார்! ஆனால் ஷண்முகம் மட்டும் சிரிக்கவில்லை.) நிச்சயமாக கலைவளர்ச்சி கெட்டு விடாது என்று அமைச்சருக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்!

ஓவியர்களுக்கு கேமராவைப் போல் கண்கள் இருக்க வேண்டும்! மேகமா? மலையா? மேகத்திற்கும் மலைக்கும் இடையிலே பறக்கும் பறவையா? என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும்! மேகத்திற்கும், மலைக்கும், அங்கே பறக்கும்பறவைக்கும் அதிக வித்தியாசம் இருக்காது! மாதவனைப் போன்றபெரிய ஓவியக் கலைஞர்களுக்கு இது சாதாரணம் தான்!

தூரிகையை எடுத்து இந்த வணக்கலயத்தில் தொட்டுத் தடவினால் மலை—அந்த வணக்கலையத்தில் ஒரு தடவையும், இதிலே ஒரு தடவையும் தொட்டுப் பூசினால் மேகம்—இன்னொரு வண்ணக் கலயத்தில் தொட்டு ஒரு புள்ளிவைத்தால் பறவை! மாதவனுக்கு இத்தனை திறமையும் உண்டு! கண்மூடி கண்திறப்பதற்கு முன்பு கண்கவர் ஓவியங்களைத் தீட்டும் ஆற்றல் பெற்றவர்!

கலைவாணர் என், எஸ். கிருஷ்ணன் நாடகம் ஒன்றில் 6-7 காட்சிகளுக்குப் பிறகு ஒரு சிறந்த காட்சி ஒன்று வரும்! அதிலே ஒரு சோலைக் காட்சி! தென்னை மரத்தில் ஒரு தென்னம் கீற்று ஓலை காட்டப்படும்! ''தென்னம் ஓலைதானே இதென்ன பிரமாதம்'' என்று சிலர் சொல்லக் கூடும்! கிட்டே இருந்து பார்த்தால் ஒன்றும் தெரியாது! வெளிப்புறம் இருக்கும் பச்சைக்கும் உள்புறம் இருக்கும் பச்சைக்கும் வித்தியாசம் உண்டு! தென்னை ஓலையின் உள்புறம் சூரிய உஷ்ணம் பட்டு அது ஒரு நிறமும், வெளிப்புறம் ஒரு நிறமும் இருக்கும்! அது நாடகம் பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியும்! அந்த காட்சியில் வர்ணம் உலராமலேயே இருக்கும்.

ஓவியக்கலை வளர அரசாங்கத்தின் ஆதரவு மிகவும் தேவையாகும்!

பிரான்ஸ் நாட்டில் அகடாமி ஆப் ஆர்ட்ஸ் என்ற கழகம் ஓவியர்களுக்கு நல்ல பணி புரிந்து வருகிறது!

நம்முடைய அரசாங்கமும் ஓவியக் கலையை வளர்க்க வேண்டும்!

திருக்குறளின் பொருளை ஓவியமாகத் தீட்டி சர்க்கார் வெளியிடலாம்! சிலப்பதிகார காட்சிகளையும், குறள் குறுந்தொகைக் காட்சிகளையும் மணிமேகலையையும் சர்க்கார் சித்திரமாகத் தீட்டி கண்காட்சி சாலைகள் நடத்தலாம்!

''அண்ணாதுரை சிலப்பதிகாரத்தையும், குறளையும், குறுந்தொகைக் காட்கிகளையும் சொன்னாரே தவிர ஏன் ஓர் இராமாயணத்தை சொல்லக் கூடாது'' என்று நிதி அமைச்சர் நினைக்கக் கூடும்! (சுப்பிரமணியம் சிரிக்கிறார்) ராமாயணக் காட்சிகள் முன்னமேயே நாடெங்கும் சிற்பக்கலையாக மாறி இருக்கிறது (அமைச்சர் விழுந்து விழுந்து சிரிக்கிறார்,)

நல்ல ஓவியங்களைத் தீட்டித் தரும் நூறு ஓவியர்களுக்கு அரசாங்கம் பரிசுகளும் வழங்கலாம்! இந்த சாதரண காரியங்களை அரசாங்கம் செய்ய வேண்டும்.

நம் நாட்டில் கலையை ரசிக்கும் உள்ளம் ஏற்படாததற்குக் காரணம் வறுமை தான்! இது முதலில் போக்கப்பட வேண்டும் வறுமை ஒழிந்தால் தான் கலை வளரும்!

திராட்சைக் குலையை பறவை கொத்தித் தின்றதாக கருணாநிதி குறிப்பிட்டார்! வறுமை ஒழிக்கப்படா விட்டால் பசித்த மனிதனே அதை கொத்தித் தின்ன ஆரம்பித்து விடுவான்!

மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்தால் எல்லாவற்றிலும் உயர்வு ஏற்படும்!

தமிழகத்தின் தலை சிறந்த ஓவியர் மாதவனுக்கு அளிக்கப்படும் இந்த பட்ட மளிப்பு விழாவிலே ஓவியக் கலை வளர வேண்டும் என்றும், அதற்காக அனைவரும் பாடுபட வேண்டு மென்றும் விரும்பிக் கேட்டுக்கொண்டு—நண்பர் மாதவன் அவர்களையும் பாராட்டி முடிக்கிறேன்!

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'இந்தியா ஒன்றுதான்—அதற்குப் பெயரும் பாரதம்தான்—வடக்கு வாழ்ந்தாலும், தெற்கு வாழ்ந்தாலும் ஒன்று தான்' என்று கருதினால் காளைமாட்டு வீரர்களுக்கு ஓட்டளியுங்கள்.

வடக்கே அணைகள்! தெற்கே வரண்ட பாலைகள்! வடக்கே வளம்! தெற்கே சுடுகாடு! இது நீதியா? முறையா? என்று நெஞ்சம் குமுறினால் தன்மானம் பீறிட்டெழுந்தால் கழக வீரர்களுக்கு ஓட்டளியுங்கள்!

புதுச்சேரி தமிழகத்தில் இருக்க வேண்டுமென்றால், புதுச்சேரியில் வாழ்பவர்கள் தமிழர்களாக இருக்க வேண்டுமானால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்ட ளியுங்கள்!

புதுச்சேரி பாரதத்தில் இருக்க வேண்டு மென்றால், புதுச்சேரியில் வாழும் மக்கள் இந்தியர்கள், இந்தி மொழி பேசுபவர்கள் என்றால் காங்கிரஸ்கட்சிக்கு 'ஜே' போட்டு ஓட்டளியுங்கள்!

புதுச்சேரி மக்களே! உங்களுக்கு தமிழ்வேண்டுமா? செத்த இந்தி மொழி வேண்டுமா? தேர்தலிலே சொல்லுங்கள்!

புதுவை மாநிலமே! உனக்கு புது வாழ்வு வேண்டுமா? அல்லது அடிமை வாழ்வுதான் வேண்டுமா? தேர்தலிலே பதில் சொல்!

புதுவையே! நீ வாழப் போகிறாயா? உன் தலை விதியை நிர்ணயித்துக் கொள்!

'ஆம்! வாழத்தான்வேண்டும்! ஆம்! புதுவை புதுமணம் பெற்று வாழத்தான் வேண்டும்!' என்கிறாயா?

அப்படியானால் வெற்றிக் கொடியைத் தூக்கு! உயரே பறக்கவிடு! ஜெய பேரிகை கொட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும், வாணியா எஸ். அச்சிடுபவரும் கா, கல்விப்பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு. சென்னை
பி.1-35 இளங்கோ வலகம் அலு தெரு. சென்னை-14